GCG1-4-TA

# சீஷர்களை உருவாக்கிடுங்கள்: கிறிஸ்தவர்களுக்கான இயேசுவின் அழைப்பு- நிகழ்ச்சி 4

**அறிவிப்பாளர்:** எது மிகவும் முக்கியமானது என்று நினைக்கிறீர்கள்?

அமெரிக்காவிலும், கானடா, மத்திய அமெரிகா, தென் அமெரிக்கா, ஐரோப்பா, மத்திய கிழக்கு பகுதி, ஆப்ரிகா, ஆசியா, பிலிப்பைன்ஸ், ஆஸ்திரேலியாவிலும் உள்ள ஒவ்வொரு கிறிஸ்தவரும் செய்யவேண்டிய பிரதானமான காரியமாக இயேசு எதிர்ப்பார்க்கிறது என்ன?

அதற்கு இயேசு, "புறப்பட்டு போய் சீஷர்களாக்குங்கள் என்றார்." சீஷன் என்றால் என்ன? எப்படி சீஷர்களை உருவாக்க முடியும்?

இதை பற்றி சொல்ல விருப்பவர் எனது இன்றைய விருந்தினரான ராபி கேலட்டி, இவர் 3200 அங்கத்தினர்களை கொண்ட சபைக்கு மேய்ப்பராக இருக்கிறார் நான்கு காலை ஆராதனைகள் அங்கு நாடாகும், அதோடு தனிப்பட்ட விதத்தில் ஒவ்வொரு ஆண்டும் ஏழு முதல் எட்டு நபர்களை சீஷர்களாக ஏற்ப்படுத்துகிறார். அவர்களும் மற்றவர்கள் சீஷர்களாக்க புறப்பட்டு செல்கின்றனர்.

இதுவரைக்கும் நீங்கள் யாரையும் சீஷர்களாக ஏற்ப்படுத்தாதிருந்தால், இதை உங்களால் நிச்சயம் செய்ய முடியுமா? நீங்கள் அறிந்துகொள்ள வேண்டிய அடிப்படை செயல்முறை காரியங்கள் என்ன?

அதைதான் இன்றைக்கு தி ஜான் அன்கேர்பெர்க் சிறப்பு நிகழ்ச்சியில் அறிந்துகொள்ள இருக்கிறோம்.

*****

**Dr. ஜான் அன்கெர்பெர்க்:** நிகழ்ச்சிக்கு உங்களை வரவேற்கிறோம். கிறிஸ்துவை அறிந்தவர்கள் மற்றும் உலக ஜனத்தை குறித்த அதிர்ச்சியூட்டும் உண்மைகளை பற்றி பார்த்துகொண்டிருக்கிறோம். புள்ளி விபர கணக்குபடி இன்றைக்கு உலகில் சுமார் 700 கோடி மக்கள் இருக்கிறார்கள், அதில் நானூற்றி ஐம்பது கோடி மக்கள் இதுவரை கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவை பற்றி அறியாமல் இருக்கிறார்கள். இயேசு கிறிஸ்து, வேதாத்தில், கிறிஸ்தவர்களாக இருக்கிற நமக்கு இன்றைக்கு, எப்படி இவர்களை சென்றடைவது என்பதற்காக திட்டத்தை கொடுத்திருக்கிறார். அதைதான் பிரதான கட்டளை என்கிறோம். சகல ஜாதிகளையும் நாம் சீஷர்களாக உருவாக்க வேண்டும். அதற்கு என்ன அர்த்தம்? அதை எப்படி கொண்டுசெல்வது? நமது அன்றாட வாழ்வில் இதை எப்படி செய்வது? நாம் பித்தான கட்டளையின் நடைமுறை வழிகள் மற்றும் அதோடு இணைந்திருக்கும் வாக்குத்தத்தத்தை பற்றி பார்த்துகொண்டிருக்கிறோம். நமது தேசத்தில் பிரசித்திபெற்ற வேதாகம போதகர்களில் ஒருவரை நான் அழைத்திருக்கிறேன், ராபி கேலட்டி, வேதத்திலிருந்து இந்த காரியங்களை விளக்கும்படி அவரிடம் கேட்டிருக்கிறேன்.

சரி ராபி, இன்றைக்கு நாம் இதை பற்றிதான் பேச இருக்கிறோம். இயேசு சொல்கிறார், "நீங்கள் போய் நான் உங்களுக்கு கட்டளையிட்ட யாவையும் அவர்கள் கைகொள்ளும் படி உபதேசியுங்கள்." இது ஒரு பெரிய கட்டளை போலிருகிறது. இதை எப்படி செய்ய முடியும்?

**ராபி கேலட்டி:** சரி. இது அருமையான கேள்வி. உலகத்தில், ஜனங்கள்

அறிவுப்பூர்வமான தகவல்களால் தங்கள் மனத்தை நிரப்பி புத்தியடைகிரார்கள். ஆனால் வேதத்தில் ஒரு வித்தியாசமான காரியத்தை பார்க்கிறோம். வேதத்தில், அறிந்துகொள்ளும்படி, கற்றுகொள்வதோடு, செய்யவும் கற்றுகொள்கிறோம். வேதத்தில் இயேசு பொதுவாக சொல்கிற காரியம், "அறிந்துகொண்டு செயல்பட வேண்டும். கேட்க்கிறவர்களாக மட்டுமல்ல செய்கிறவர்களாக இருங்கள், கேட்டு அதன்படி ஜீவிக்க வேண்டும்." சரி, கேள்வி என்னன்னா, நாம் என்ன கற்றுக்கொள்ள இயேசு விரும்புகிறார்?

சரி, அதை பிரதான கட்டளையில் சொல்லியிருக்கிறார்: எல்லாவற்றையும் தெரிந்துகொள். அதாவது, இதுதான் வேலைன்னு நினைக்கிறேன்: நான் உங்களுக்கு கட்டளையிட்ட யாவையும் அறிந்துகொள்ளும் படி செய்தல்."

இந்த நிகழ்ச்சியில் நான் செய்ய விரும்புகிற காரியம் இதை மூன்று நிலைகளாக பிரித்துகொல்கிறேன்: முதல் நிலை ஆசிரியனாக இருக்கும் பவுல்; இரண்டாவது, மாணவனாகிய தீமோத்தேயு; மேலும் மூன்றாவதாக,பயிற்சி பெறுபவர்களான நாம். தேவன் எதை செய்யும்படி நம்மை அழைத்திருக்கிறார் அவர் நமக்கு கட்டளையிட்ட அனைத்தையும் எப்படி கடைபிடிப்பது?

**Dr. ஜான் அன்கெர்பெர்க்:** நல்லா இருக்குது.

**ராபி கேலட்டி:** முதலாவதாக, ஒரு ஆசிரியர்க்கு சிறந்த உதாரணமாக இருப்பவர்

அப்போஸ்தலனாகிய பவுல். அவர் தீவிரமான மனமாற்றம் அடைந்தார், பவுலின் சாட்சி தெரியுமா, அப்போஸ்தலர் 9. கிறிஸ்தவர்களை துன்பப்படுத்தி கொண்டிருந்தார்; ஸ்தேவானுடைய மரணத்தின் போது அங்கு இருந்தார்; என்கிறது. அப்போஸ்தலர் 9 அதிகாரத்தில் தமஸ்குவுக்கு போகும் வழியில் இருந்தார். ஒரு வெளிச்சத்தை பார்க்கிறார், ஒரு சத்தத்தை கேட்க்கிறார். கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் சத்தம், "பவுல், பவுல், நீ என்னை துன்பப்படுத்துகிறாய் என்றது." பவுல் குருடனாக மாறினார். அப்போஸ்தலர் 9 பிற்பகுதியில் அனனியா அவரை சந்தித்து, அவருக்காக ஜெபிக்கிறார். அவருடைய கண்களில் இருந்து செதிள்கள் விழுந்தது. பவுலால் பார்க்க முடிந்தது. அதற்கு பிறகு தர்சு பட்டணத்திற்கு போய் தேவனை பற்றி கொஞ்சம் கொஞ்சமாக பேசுனார் என்று சொல்லப்பட்டிருக்கிறது.

இங்க கேள்வி என்னன்னா, அவர் இரட்சிக்கப்பட்ட பிறகு பவுல் என்ன செய்தார்? அவர் போய் சுவிசேஷம் சொல்லி பிரசங்கிக்க துவங்கினார் என்று நினைக்கிலாம். ஆனா கலாத்தியர் 1ல்அவர் என்ன சொல்கிறார் என்று கவனியுங்கள். கலாத்தியரில் துவக்கத்தில் பவுல் தமது வாழ்வை பற்றிய சாட்சியை பகிர்ந்துகொள்கிறார். 16ம் வசனத்தை

கவனியுங்கள்: “நான் மாம்சத்தோடும் இரத்தத்தோடும் ஆலோசனை பண்ணாமல்,” என்று சொல்லி, “எனக்கு முன் அப்போஸ்தலரானவர்களிடத்திற்கு எருசலேமுக்கு போகாமல். அரபு தேசத்திற்கு போய் பிறகு தமஸ்குவுக்கு திரும்பி வந்தேன். பிறகு, மூன்று வருடங்கள் கழித்து, கேபாவை பார்க்கும்படி எருசலேமுக்கு போய் அவனுடனே பதினைந்துநாள் தங்கியிருந்தேன்.”

இப்ப பொதுவாக எழும் கேள்வி, அந்த மூன்று வருடங்கள் பவுல் என்ன செய்தார்? அவர் அரேபியாவுக்கு சென்றார், நான் நம்புகிறேன் – ஒவ்வொரு விரிவுரையாளர்களும் நம்புகிறார்கள் – அவர் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவினால் சீஷனாக உருவாக்கப்பட்டார். அவர் தேவனோடு நேரத்தை செலவிட்டார். இயேசு அவனுக்கு குருத்துவராக இருந்திருப்பார், விசுவாசத்தின் உபதேசத்தை கற்றுகொடுத்தார், அவருக்கு அவர் கட்டளையிட்ட அனைத்து உபதேசங்களையும் கற்றுகொடுத்தார். வேத அறிவு விளக்கவுரை,” இதை சரியாக, சொல்கிறதென்று நினைக்கிறேன். விளக்கவுரையாளர் சொல்வதை கவனியுங்கள்:  அவன்  (பவுல்) அங்கே சுவிசேஷம் சொல்லும்படியாக சென்றான் என்பது சந்தேகமாக இருக்கிறது, மனிதர்களை விட்டு தணித்து போய் தேவனோடு நேரத்தை செலவிட்டு தனி தியானத்தில் ஈடுபடவும், இன்னும் மேலான வெளிப்பாடுகளை பெற்றுக்கொள்ளும்படியாக போயிருந்தார்நியாயப்பிரமாணத்தை கற்றுகொள்ளும் ஆர்வமுள்ள மாணவர்கள் அவனுடைய கூற்றுகளை ஆராய்ந்து பார்த்து பழைய ஏற்ப்பாட்டில் கிறிஸ்துவை குறித்த காரியங்களை தேடியிருக்கிறார்கள். இன்றைக்கு அரேபியாவில் காணப்படும் அனைத்தும் (இது சுவாரஸ்யமானது), பவுல் தமது ரோமர் நிருபத்தில் விளக்கி கூறியிருக்கும் கிறிஸ்தவ உபதேசத்தின் பிரதிபளிப்பாக இருக்கிறது” சரி, இதிலிருக்கும் ஒற்றுமையை கவனிங்க, ஜான். கர்த்தராகிய இயேசு கிறிஸ்து பன்னிரண்டு பேரை அழைத்து தம்மை பின்பற்றும்படி செய்து மூன்று வருடங்கள் அவர்களை சீஷர்களாக இருவாக்கினார். அப்போஸ்தலனாகிய பவுல், அவருடைய வார்த்தைகளாலே சொல்லுகிறார், அதாவது, “அகால பிறவியாகிய எனக்கும்.” இருந்தாலும் தேவன், இவரை அழைத்த பிறகு, அரபு தேசத்துக்கு

அனுப்பினார், அங்க இயேசு தமது சீஷர்களுக்கு குருத்துவராக இருந்து நடத்தியதுபோல மூன்று வருடம் இவருக்கும் கற்றுகொடுத்து உருவாக்கினார்.

**Dr. ஜான் அன்கெர்பெர்க்:** இது ஒரு கேள்வியை உண்டாக்குகிறது, பவுல் எதைசொல்ல வேண்டும் என்று இயேசு கற்றுகொடுத்தார், அதன்படிதான் அவரும் வாழ்ந்திருக்கிறாரா?

**ராபி கேலட்டி:** அவர் பவுலிடம் தனக்கு அறிந்தபடியே வாழும்படி சொன்னதாக நினைக்கிறேன். அதாவது, எல்லாவற்றையும் அறிந்துகொள்வது ஒன்று, ஆனா விசுவாசிகளாகிய நாம் நம்முடைய வாழ்வில் அவைகளை அப்பியாசப்படுத்துவதுதான் முக்கியம். பிரதான கட்டளையில் உள்ள ஒரு வார்த்தையை வலியுத்துகிறேன், 'கைகொள்ளும்படி'. இயேசு சொல்கிறார், "நான் கட்டளையிட்ட யாவையும் கைகொள்ளும்ப்டி உபதேசியுங்கள்." இந்த வார்த்தை, 'கைகொள்ளுதல்' அற்புதமான வார்த்தை. இதற்கு அர்த்தம் காத்துகொள்ளுதல், கவனமாக பார்த்துகொள்ளுதல். பாதுகாத்தல் என்ற இன்னொரு அர்த்தமும் உண்டு, காத்துகொள்தல். சரி, வேதாகமத்தில், உலகத்தை விட மாறுதலாக சொல்லப்படுகிறது. ஒன்றை நான் பாதுகாக்கிறேன் என்றால், பொதுவாக நினைவுக்கு வருவது மக்களை நெருங்க விடாமல் பாதுகாப்பாக நிர்ப்பது என்பதுதான்.ஆனா வேதம் வித்தியாசமானது. ஒரு நபர் ஒன்றை காத்துகொள்வது பாதுகாப்பது என்று சொன்னால், அந்த செய்தியை மற்றவர்களோடு பகிர்ந்துகொண்டு காத்துகொள் என்று சொல்கிறது.

அதைதான் பவுல் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவிடம் கற்றுகொண்டார். சரி, இதை வேத வசனங்களில் நாம் பார்க்கிறோம். கற்றுகொள்வதற்கும் செய்வதற்கும் உள்ள வித்தியாசத்தை பவுல் வசனங்களில் கூறியிருக்கிறார், கேட்பது மற்றும் ஜீவிப்பதின் வித்தியாசம். பிளிப்பியார் 3:15-18ல் அவர் சொல்லியிருப்பதை பாருங்கள்: "ஆகையால் நம்மில் தேறினவர்கள் யாவரும் இந்தச் சிந்தையாயிருக்கக்கடவோம், எந்த காரியத்திலாவது நீங்கள் வேறே சிந்தையாயிருந்தால் தேவன் உங்களுக்கு

வெளிப்படுத்துவார். நாம் எதுவரை தேறியிருக்கிறோமோ அதுமுதல் ஒரே சிந்தையாய் இருப்போமாக. சகோதரரே, நீங்கள் என்னோடே கூடப் பின்பற்றுகிறவர்களாகி நாங்கள் உங்களுக்கு வழிகாட்டுகிறபடி நடக்கிறவர்களை மாதிரியாக நோக்குங்கள் ஏனெனில் அநேகர்  கிறிஸ்துவின் சிலுவைக்குப் பகைஞரென்று உங்களுக்கு அநேகந்தரம் சொன்னேன், இப்பொழுதும் கண்ணீரோடும் சொல்லுகிறேன்." இவர் சொல்கிற விஷயம் சுவாரஸ்யமாக இருக்கிறது. அவர் சொல்கிறார், "ஒரே சிந்தையாய்." அதற்கு அர்த்தம் அதில் தரித்திருந்து கவனிக்க வேண்டும், கற்று தெரிந்துகொள்வது மட்டுமல்ல, கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவை பற்றி என்ன தெரியுமோ அதை வாழ்ந்து காட்ட வேண்டும்.

**Dr. ஜான் அன்கெர்பெர்க்:** அவர் நடக்கும்படியாக சொல்லியிருக்கிறார்.

நடந்துகொள்தல் என்ற வார்த்தையின் அர்த்தம் என்ன?

**ராபி கேலட்டி:** சரி. "நடப்பது" எனபது அருமையான வார்த்தை. இதை வேதம்

முழுவதும் பார்க்க முடியும். உண்மையில், இயேசு சொல்லும்போது, "வாருங்கள், என்னை பின்பற்றுங்கள்," இங்க என்ன சொல்றாருன்னா, "வந்து எனக்கு பின்னால் நடங்கள் என்கிறார்." ரபிக்கு பின்னால நடக்கும், ரபிக்கு தெரிந்ததை நாமும் தெரிந்துகொள்வது மட்டும் அல்ல, ரபி செய்தவற்றை நாமும் செய்ய வேண்டியது அவசியம். சரி, இந்த நடை என்பது விசுவாசத்தின் செயலாக இருக்கிறது. அதாவது, அநேகர் இப்படியாக சொல்லுகிறார்கள், "தேவனை பற்றி எனக்கு தெரியும்." அல்லது, "தேவனை எனக்கு தெரியும்," தேவனுடைய விசுவாசம் எனக்கு இருக்கிறது, அல்லது இயேசுவின் விசுவாசம்." பிசாசு கூட இதை சொல்ல முடியுமே, அதை வசனத்திலே நாமும் பார்க்கிறோம். பெரும்பாலான சபை மக்களைவிட பிசாசுக்கு விசுவாசத்தின் உபதேசத்தை பற்றி நன்றாக தெரியும் என்று உங்களுக்கு தெரியுமா? உண்மையில், தேவனை பற்றி அவனுக்கு எல்லாம் தெரியும். ஒரு காலத்தில் அவன் பரலோகத்தில் இருந்தான். பிரச்சனை என்னன்னா, இரட்சிக்கும் விசுவாசம் அவனிடம் கிடையாது.

யாக்கோபு அதை யாக்கோபு 2:18ல் கூறுகிறார்: “ஒருவன் உனக்கு விசுவாசம் உண்டு எனக்கு கிரியைகள் உண்டு உன் விசுவாசத்தை எனக்கு காண்பி நான் என் விசுவாசத்தை என் கிரியைகளினாலே காண்பிப்பேன் என்பானே.தேவன் ஒருவர் உண்டென்று விசுவாசிக்கிறாய், அப்படி செய்கிறது நல்லதுதான். பிசாசுகளும் விசுவாசித்து நடுங்குகின்றன.”சரி, இரட்சிக்கும் விசுவாசம் பிசாசுகளின் நம்பிக்கை இவற்றிற்கு இருக்கும் வித்தியாசம், இரட்சிக்கும் விசுவாசம் எப்போதும் செயல்பாட்டில் இருக்கும். ஜான், இரட்சிக்கப்பட நாம எதையும் செய்யல. கிருபையினால் விசுவாசத்தின் மூலம் இரட்சிக்கப்பட்டிருக்கிறோம். இது நம்மால் உண்டாது கிடையாது, எபேசியர் 2 அதைதான் சொல்கிறது, இது தேவனுடைய ஈவு, ஒருவரும் பெருமைபாராட்ட முடியாது. இரட்சிக்கப்பட நாம எதையும் செய்ய முடியாது, ஆனா இரட்சிக்கப்பட்ட பிறகு, இரட்சிப்பின் அனுபவத்தோடு செயல்பட முடியும்.

**Dr. ஜான் அன்கெர்பெர்க்:** அதன் விளைவு. ஆ.

**ராபி கேலட்டி:** கிருபையை பெறுவது என்பது ஒன்று, கிருபையாக இருப்பதென்பது வேறு. அதாவது, இரக்கத்தை பெறுவது வேறு, இரக்கமாக இருப்பதென்பது வேறு. அன்பை புரிந்துகொள்வது என்பது வேறு, நேசிக்கமுடியாதவர்களை நேசிப்பது என்பது வேறு. அதைதான் வேதாகமத்தின் சுவிசேஷங்கள் முழுவதிலும் பவுல் நமக்கு எடுத்துரைக்கிறார்.

**Dr. ஜான் அன்கெர்பெர்க்:** அதோடு, இயேசு அவரிடம் சொல்லியிருப்பார், கவனி, பவுல், இதை நீ மற்றவர்களோடு பகிர்ந்துகொள்ளவேண்டும், ஏன்னா இதைதான் அவர் தீமோத்தேயுவுக்கு கூறுகிறார். இன்னொருவருடைய சீஷனாக இருப்பது என்றால் என்ன என்பதையும் நமக்கு மாதிரியாக காட்டியிருக்கிறார். தீமோத்தேயுவை பற்றி சொல்லுங்கள்.

**ராபி கேலட்டி:** சரி. நீங்க சரியான விஷயத்தை கச்சிதமா சொல்லீட்டீங்க. பவுல் தீமோத்தேயு என்ற பேர்கொண்ட வாலிபனை பார்க்கிறார், அப்ப பதினாறு வயதிருக்கும் என நினைக்கிறேன். தீமோத்தேயுவுக்கு தனது வாழ்வில் தாக்கத்தை ஏற்ப்படுத்தும் தாயார் இருந்தார்கள், அவனுக்கு பாட்டியும் இருந்தார்கள், அவனுடைய தகப்பன் கிரேக்கன். அதனால் தகப்பனிடமிருந்து எந்த தாக்கமும் அவனுக்குள் ஏற்ப்படவில்லை என்பது தெளிவாகிறது. இதை 2 தீமோத்தேயு 1:5ல் பார்க்கிறோம். (அந்த விசுவாசம் முந்தி உன் பாட்டியாகிய (பவுல் இதை சொல்லுகிறார்) லோவிசாளுக்குள்ளும் உன் தாயாகிய ஐனிக்கேயாளுக்குள்ளும் நிலைத்திருந்தது; அது உனக்குள்ளும் நிலைத்திருக்கிறதென்று நிச்சயித்திருக்கிறேன்." பவுல் சொல்கிறார், "கவனி, நீ நீயாக இருப்பதற்கு காரணம் உன்னுடைய தகப்பனார் கிடையாது, அது உன் பாட்டி மற்றும் உன் தாயாரின் தாக்கம் என்று சொல்கிறார்."

இந்த நேரத்தில் தாய்மார்களை உற்சாகப்படுத்துகிறேன். அதாவது, இந்த உலகத்தில் பெற்றோரில் ஒருவர் மட்டும் தங்கள் பிள்ளைகளை வளர்த்து வருகிறார்கள். இந்த உலகத்தில் அந்த பிள்ளைகளை வளர்க்கிறார்கள். இது ஒரு உற்ச்சாகம் தான். இப்ப நீங்க ஒரு சிங்கிள் பேரன்டாக இருந்தால், ஒருவேளை, உங்களுடைய விசுவாசம் மற்றும் வாஞ்சையினால் பிள்ளைகளை சபையின் கோட்ப்பாடுகளுக்குள் வளர்ப்பீர்கள் என்றால், நிச்சயம் ஒருநாள் ஒரு தீமோத்தேயு உருவாக முடியும்.

**Dr. ஜான் அன்கெர்பெர்க்:** சரி. அருமையான ஒன்று என நினைக்கிறேன். பவுல் தீமோத்தேயுவிடம் இதை சொல்கிறார், "உனக்கு ஒப்புவித்ததில் நீ ஜாக்கிரதையாக இருந்திடு," இதற்கு என்ன அர்த்தம்?

**ராபி கேலட்டி:** சரி. அவர் இங்கு, "உன்னிடத்தில் ஒப்புவிக்கப்பட்ட அந்த நற்பொருளை காத்துக்கொள்." இதுல ஆர்ச்சரியம் ஏதாவது இருக்கிறதா, இயேசு கிறிஸ்து, தமது இறுதி நாட்களில், இதே தன்மையை தானே உபயோகித்தார்? இயேசு தமது சீஷர்களை நோக்கி, "இவைகளை நினைவுகூர்ந்து நான் உங்களுக்கு கட்டளையிட்ட யாவையும்

கைகொல்லுங்கள் என்றார்." இதே வார்த்தை, "கைகொள்." இதேதான் – வேறுவார்த்தை, ஒரே கருத்து. பவுல் தீமோத்தேயுவுக்கு சொல்கிறார்: உன்னிடத்தில் ஒப்புவிக்கப்பட்ட அந்த நற்பொருளை காத்துகொள். சரி, முன்பு சொன்னது நினைவிருக்கிறதா: காத்துகொள்ளுதல் என்றால் மற்றவர்களோடு பகிர்ந்துகொள்ளுதல். இந்த விஷயத்தை தீமோத்தேயு நன்றாக புரிந்துகொண்டார். பவுல் சொல்கிறார், "ஒருவேளை நீ அதை மறந்திருந்தால் உனக்கு நான் நினைப்பூட்டுகிறேன்." ஆகையால், என் குமாரனே நீ, (2ம் அதிகாரம் வசனம் 1) ஆதலால், என் குமாரனே, நீ கிறிஸ்து இயேசுவிலுள்ள கிருபையில் பலப்படு.அநேக சாட்சிகளுக்கு முன்பாக நீ, என்னிடத்தில் கேட்டவைகளை மற்றவர்களுக்குப் போதிக்கத்தக்க உண்மையுள்ள மனுஷர்களிடத்தில் ஒப்புவி." தீமோத்தேயுவுக்கு பவுல், மூலமாக தெரிந்துகொண்டான், இந்த காரியங்களை அவன் கற்றுகொள்ளவது மட்டும் போதாது, இதை மற்றவர்களுடைய வாழ்வில் தாக்கத்தை உண்டாக்கும்படி வாழவும் வேண்டும்.

**Dr. ஜான் அன்கெர்பெர்க்:** சரி, துரிதமாக, ஒரு விஷயம், பவுல் தீமோத்தேயுவுக்கு கற்றுகொடுக்கும்போது செய்த விதங்களில் ஒன்று அவருடைய ஊழிய பயணத்தில் இவரையும் கூட அழைத்து சென்றார்.

**ராபி கேலட்டி:** ஆமா. அதாவது, ஜான், எனக்கு கீழ, ஏற்க்கனவே சொன்னமாதிரி, ஒன்பது பேர் இருக்காங்க. அவங்களுக்கு பலவித காரியங்களை கற்றுகொடுக்க நான் முயற்ச்சிக்கிறேன். உபதேசங்களையும் இறையியலையும் கற்றுகொள்கிறோம். சில மாதங்களுக்கு முன்பாக ஜெபத்தை பற்றி சிலவற்றை கற்றுகொண்டோம், தேவன் சகலத்தையும் அறிந்திருக்கிறார் அவர் சகலத்தையும் கட்டுபாட்டில் கொண்டிருக்கிறார் என்ற இரண்டு காரியங்களின் தொடர்புகளை பார்த்தோம், ஆனா விசுவாசிகளாக நாம் ஜெபிக்க வேண்டும் என்று கட்டளியிடுகிறார். அவங்க என்னை கேள்வி கேட்க துவங்கினார்கள், சரி, தேவனுக்கு எல்லாம் தெரிந்திருந்தால், நாம எதற்காக ஜெபிக்க

வேண்டும்? அப்ப அவங்ககிட்ட நா பகிர்ந்துகொள்ள துவங்கினேன், சரி, தேவனுக்கு எல்லாம் தெரியும், ஆனாலும் ஜெபிக்கும்படியான கட்டளையை கொடுக்கிறார். எப்படி ஜெபிக்க வேண்டும் என்று அவர்களுக்கு சொல்லி அவர்களோடு சேர்ந்து அலுவலகத்தில் நாங்கள் ஜெபித்தோம்.

சிறைச்சாலையில் பேசும்படியான வாய்ப்பு எனக்கு கிடைத்தது. என்னுடைய 3 சீஷர்களை என்னுடன் அழைத்து சென்றேன். ஆன் தி ஜாப் – டிரேனிங், என்று சொல்லலாம். ஒன்றாக இணைந்து ஊழியத்திற்கு சென்றோம். நாங்க பிரசங்கம் செய்யும்படி வெளியில் சென்றபோது, சுவிசேஷத்திற்கு மருவுத்தரவு அளிக்கும்படி உள்ளிருந்த நண்பர்களுக்கு செய்தியின் முடிவில் நான் அழைப்பு கொடுத்தேன். உண்மையாகவே, தேவனுடைய கிருபையால், சிறையின் நடுமையத்தில் இருக்கும் அந்த மஞ்சள் கோட்டில் ஆண்களும் பெண்களும் வரிசையாக நின்றார்கள். ஒரு போதகர் அங்கிருந்தார் – அங்க போகனுன்ற திட்டம் எங்களுக்கு இல்லை – அந்த போதகர் என்னை அணைத்துக்கொண்டு சொன்னார், “இவர்களுக்காக நாம் ஜெபிக்க வேண்டும் என்றார்.” பொதுவாக, அங்க என்ன நடந்திருக்குன்னு தெரியும்? என்னுடைய சகோதர்களை [பார்த்து சொன்னேன், “உள்ள போகலாம்.” அவங்க கேட்டாங்க, நானா? நான் சொன்னே, “தயவு செய்து இதை நம்பு. நாமதான்னு சொன்னேன்.” இவர்கள் பல வாரங்களாக ஜெபத்தை பற்றி பேசிக்கொண்டிருந்தார்கள். கிறிஸ்த்துவை ஏற்றுகொள்ளும்படியான ஜெபத்திற்கு இடையில், ஐந்து நிமிடங்களாக ஒன்றை கவனித்தேன், எனக்கு கீழ் இருந்தவர்களில் ஒரு வாலிபன் தேவனுக்கு முன்பாக லாதுகொண்டிருந்தான், ஒருவருக்கு அலுத்து ஜெபித்தான். இடது பக்கம் பார்த்த போது அங்கு ஒருவனை பார்த்தேன், ஜெபிக்க வெட்கப்பட்டு நின்றுகொண்டிருந்தான், கிறிஸ்துவை அவர்கள் ஏற்றுகொள்ளும் விதமான ஜெபத்தில், தேவனுக்கு முன்பாக கதறுதல். கார்ல ஏறினதும், எனக்கு ஹாய் பை குடுத்து சொன்னாங்க, “பாஸ்டர், இத நம்பவே முடியல.” என்னன்னா, “இன்றைய நேர்முக பயிற்சியில் ஜெபத்தை பற்றி நன்றாக கற்றுகொண்டோம், இது அலுவலக வேலைவிட நன்றாக இருந்ததாம்.

**Dr. ஜான் அன்கெர்பெர்க்:** சரி. இப்போது ஒரு இடைவேளை எடுகொள்வோம். நாம திரும்ப வந்ததும் ஒவ்வொரு கிறிஸ்தவனும் அறிந்திருக்க வேண்டிய மற்றவர்களோடு பகிர வேண்டிய 3 உண்மைகளை பார்க்க இருக்கிறோம். இணைந்திருங்கள். மீண்டும் சந்திப்போம்.

*****

**Dr. ஜான் அன்கெர்பெர்க்:** மீண்டும் வருக. நாம் ராபி கேலட்டியுடன் பேசிக்கொண்டிருக்கிறோம், இவர் சிறந்த வேதாகம போதகர். நாம் பிரதான கட்டளையை பற்றி பேசிக்கொண்டிருக்கிறோம். இதை எப்படி கொண்டு செல்வது? நாம் கற்றுக்கொள்ள வேண்டிய விஷயங்கள் இருக்கிறது, ஆல்ரைட். அவை என்னென்ன, ராபி?

**ராபி கேலட்டி:** சரி, இதுவரைக்கும் நாம, ஜான், பவுலின் வாழ்வில் அவரை ஒரு ஆசிரியராக பார்த்தோம், அவர் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவிடமிருந்து கற்றுகொண்டார், அதன் படியாக அவர் வாழ்ந்தார். அவர் கற்றுக்கொள்ளவும் தாம் கற்றுகொண்டபடி வாழவும் தொடங்கினார். பிறகு பவுல் தீமோத்தேயுவின் வாழ்வில் தாக்கத்தை உண்டாக்கியதை பற்றி பார்த்தோம். தீமொத்தேயுவும் கற்றுக்கொண்டு அதன்படி வாழ்ந்தான். நம்மை நாமே கேட்டுக்கொள்ள வேண்டிய கேள்வி, “நான் எதை கற்றுக்கொள்ள வேண்டும் என்று தேவன் எதிர்பார்க்கிறார்? சார்லஸ் ஸ்பர்ஜென் இந்த வார்த்தையை சொல்லியிருக்கிறார்: “வேதம் தன் நிலையை விட்டு அகன்று போனால் அது சொந்தமல்லாத ஒருவரிடம் இருக்கிறது என்று அர்த்தமாகும்.” அதனால தேவனுடைய வார்த்தை நம்மில் பதியும்வரை அந்த வார்த்தையில் மூழ்கி இருக்க வேண்டியது அவசியம். இதை நாம் மூன்று உபதேசங்களாக பிரித்திருக்கிறேன். இந்த மூன்று உபதேசங்களுக்குள் மற்ற அனைத்து உபதேசங்களும் அடங்கும். ஆனா இந்த

மூன்று தான், என்னை பொறுத்தவரை, ஒவ்வொவொரு விசுவாசியும் அறிந்திருக்க வேண்டிய முக்கியமான உபதேசங்கள்.

அவை என்னவென்றால்: முதலாவதாக நீதிமானாக்கப்படுதல். இந்த கட்டத்தில் நீதிமானக்கப்படுதல் என்பது ஒரு விசுவாசியின் மீது தேவன் உரைக்கும் சட்டபூர்வமான அறிக்கை.இதை ரோமர் 3:28ல் பார்க்கிறோம். உங்களுக்காக நான் அதை வாசிக்கிறேன்: "மனுஷன் நியாயபிரமாணத்தின் கிரியைகளில்லாமல் விசுவாசத்தினாலேயே நீதிமானாக்கப்படுகிறான் என்று தீர்க்கிறோம்." இதுதான் சட்டப்பூர்வமானது. அதாவது ஒரு நீதிமன்றத்திற்குள் நுழையும்போது நீதிபதி தன கையில் இருக்கும் சுத்தியால் அடித்து ஒன்று அல்லது இரண்டு முடிவுகள் தான் இருக்கும் எனபது போல இருக்கிறது: வெட்கம் அல்லது அறியாமை. கர்த்தராகிய இயேசு கிறிஸ்து வரும்போது, நியாயப்பிரமாணத்தின் கிரியைகளுக்கு அப்பாற்பட்டிருக்கும், இரட்சிப்பை பெற நம்மால் எதையும் செய்ய முடியாது என்பதான் இதன் அர்த்தம். நாம தேவையோடு இருக்கிறோம். நமக்கு இரட்சகர் அவசியமாக இருக்கிறார். நம்முடைய பாவம் மீறுதல்களில் மரித்துபோயிருக்கிறோம். நாம் தேவனை தெரிந்துகொள்ளவில்லை, அவர் முதலில் நம்மை தெரிந்துகொண்டார். இயேசு சொல்கிறார், "நீங்கள் என்னை தெரிந்துகொள்ளவில்லை, நான் உங்களை தெரிந்துகொண்டேன். நீங்கள் முதலில் என்னை நேசிக்கவில்லை, நான் அன்புகூர்ந்தேன்." தேவன் இந்த உலகத்தில் அன்புகூர்ந்தபடியால் தம்முடைய ஒரே பேரான குமாரனை அனுப்பினார்." எனவே நம்முடைய பாவங்களுக்கு மனந்திரும்பி கிறிஸ்துவின் மீது விசுவாசம் வைக்கும்போது, தேவன் நம்மை தம்முடையவர்கலாக பார்க்க அவருடைய பார்வையில் நீதிமான்களாக காணப்படுகிறோம்.

சரி, இரண்டாவது, நீதிமானாக்கப்படுவது மட்டுமல்ல, நாம் பரிசுத்தமாக்கப்படுகிறோம். இரட்சிப்பின் துவக்கத்தில் பரிசுத்தமாகுதல் துவங்குகிறது. இதற்கு என்ன அர்த்தம் என்றால்" விசுவாசி கிறிஸ்துவின் சாயலுக்கு ஒப்பாக மறுரூபமாகிறான். தேவனுடைய வார்த்தைக்கு செவிகொடுக்க துவங்கி தேவ வார்த்தையின் படி வாழவும் துவங்கிடுவோம். பரிசுத்தமாக்கப்படுதலில்இரண்டு பகுதிகள் இருக்கிறது. முதலாவதாக, பரிசுத்தமாகுதலில்

முன்னேறுதல். இது தொடர்ந்து கிறிஸ்துவின் சாயலை அடையும்படி விசுவாசியின் வாழ்வில் ஏற்படும் தொடர் நிலை. இதை எபிரேயர் 10ம் அதிகாரத்தில் பார்க்கிறோம். இந்த வசனத்தை கவனியுங்கள்: "ஏனெனில் பரிசுத்தமாக்கப்படுகிறவர்களை ஒரே பலியினாலே இவர் என்றென்றைக்கும் பூரணப்படுத்தியிருகிறார்." இதுல என்ன புரியுதுன்னா, நாம தொடர்ந்து கிறிஸ்துவின் சாயலாக மாற்றப்பட்டு கொண்டே இருக்கிறோம்.

ஆனா நிலையான பரிசுத்தம் என்றும் இருக்கிறது. அதாவது, ஜான், நாம பொதுவா கிறிஸ்துவின் சாயலாக மார்வதை பற்றி பேசுகிறோம். ஆனா ஒன்றை மறந்துவிடுகிறோம் உலக தோற்றத்துக்கு முன்பே, தேவன் நம்மை பரிசுத்தமாக்கும் தெரிந்துகொண்டிருக்கிறார். இதை எபிரேயர் 10:10ல் பார்க்கிறோம்: "இயேசுகிறிஸ்துவினுடைய சரீரம் ஒரேதரம் பலியிடப்பட்டதினாலே அந்த சித்தத்தின்படி நாம் பரிசுத்தப்படுகிறோம் பரிசுத்தமாக்கப்பட்டிருக்கிறோம்."

அதனால நீதிமானாக்கப்படுதல், அடுத்தது பரிசுத்தமாக்கப்படுதல் – கிறிஸ்துவை போல

ஆவதற்கு இந்தஇரண்டு நிலைகளும் நேண்டும். இதையும் மறந்திட கூடாது, மகிமைபடுத்தப்படுதல். இது கடைசி காலத்தில் என்பது தெரிந்த விஷயம், எதிர்கால நிகழ்வு: பரலோகத்தை புரிந்துகொள்ளுதல், நரகத்தை புரிந்துகொள்ளுதல். ஒருநாளில் நமக்கு மகிமையுள்ள சரீரம் அளிக்கபடும் என்பதை புரிந்துகொள்ளுதல். அழிவுள்ள இந்த சரீரத்தை நாம் களைந்துவிட்டு மகிமையுள்ள சரீரத்தை பெற்றுகொள்வோம்.

**Dr. ஜான் அன்கெர்பெர்க்:** ஆமா. நம்முடைய பரிசுத்தமாகுதலில், கிறிஸ்துவை போல

மாறிக்கொண்டே இருப்போம். ஆனா இங்க பூமியில் இருக்கும்போது, அதை நம்மால் அடையமுடியாது, சரியா. உண்மை இதுதான், ஒருவரை விட அதிக பரிசுத்தமாக இருக்கும் நபர்கள் இருக்கிறார்கள், சரியா, ஏன்னா நம்முடைய வாழ்வின் பல நிலைகளை நாம் வளர்ந்துகொண்டிருக்கிறோம், தேவன் நமக்கு வெளிப்பாட்டை கொடுக்கும்போது மாறுகிறோம். ஆனா பரலோகத்திற்கு போன பிறகு, நிச்சயமா, அங்க வளர்ச்சி இருக்காது. நமக்கு மகிமையுள்ள சரீரம் கொடுக்கப்படும். இதுதான் உண்மை, நம்மால் பாவம் செய்ய

முடியாது. நமக்கு சோதனைகளும் இருக்காது. நம்முடைய கண்ணீர் யாவும் துடைக்கப்படும். நமக்கு கொடுக்கப்படும் சரீரத்தில் வியாதிகளோ வேதனையோ உண்டாகி அழுகி நாசமாகும் நிலை இல்லை. எனவே, இதெல்லாம் மறைந்துவிடும். அதுதான் மகிமைபடுத்தப்படுதல்.

சரி நீதிமானாக்கப்படுதல், நீதிமான் என்று அறிக்கை செய்யப்படுகிறோம். பரிசுத்தமாகுதலில் முன்நேர்த்ரம், அதாவது, நீங்க சொன்ன அந்த வசனம், “ஒரேதரம் பலியிட்டதினாலே அந்த சித்தத்தின்படி நாம் பரிசுத்தமாக்கப்பட்டிருக்கிறோம்,” ஆம் பரிசுத்தமாக்கப்பட்டுக்கொண்டிருக்கிறோம், சரி. இந்த இரண்டும் ஒரே வசனத்தில் வருகிறது. இன்னொரு உண்மை இருக்கும், முடிவு வரும்போது, ஒருநாள் நாம் மகிமையடைந்திடுவோம், ஏன்னா கிறிஸ்து நமக்கு, புதிய சரீரத்தை அளித்திடுவார்.

**ராபி கேலட்டி:** ஆமா, அடுத்த நிகழ்ச்சியில் கிறிஸ்துவை போலாகுதல் என்பதை பார்க்க இருக்கிறோம். சரி, விசுவாசத்திலிருந்து துவங்குகிறது, விசுவாசமானது தேவன் நம் மூலம் கிரியை செய்ய நமக்குள் கிரியை செய்யும் பாதையில் நடத்துகிறது, தேவனே அதை செய்து முடிப்பார், இயேசு சொன்னது போல, பவுல் சொன்னது போல, “உங்களில் நற்கிரியைகளை துவங்கினவர் அதை இயேசு கிறிஸ்துவின் நாள் பரியந்தம் முடிய நடத்திவருவார்.” சரி, இங்க ஒரு கேள்வி: இதன்படி எப்படி வாழ்வது? இதைதான் நேயர்கள் கேட்க்கிறார் என நினைக்கிறேன். நம்முடைய வாழ்வில் இதை எப்படி அப்பியாசப்படுத்துவது? உங்களுக்கு தெரிந்ததை செய்வதுதான் ஒரே வழி. இப்ப, வேதத்தை பற்றிய அறிவு பலம் கிடையாது. வேதாகமத்தில், அறிவை செயல்படுத்தும் போதுதான் வலிமை உண்டாகும் என்று பார்க்கிறோம். அதாவது, விசுவாசிகளான, நமக்கு என்ன செய்யணுன்னு தெரியும், ஆனா கேள்வி என்னன்னா, நமக்கு தெரிந்தபடி நான் வாழ்கிறோமா?

ஒருவர் தங்கள் குழந்தையை வளர்ப்பதை பற்றிய ஒரு சம்பவத்தை சமீபத்தில் சொன்னே. எனக்கு குழந்தை வளர்ப்பை பற்றி கற்றுத்தந்தார்கள். ஜான், எனக்கு 2 வயசுல ஒரு

பையன் இருக்கான் தெரியுமா, அவன் எங்களுக்கு குழந்தை வளர்ப்பை பற்றியும் பொறுமையை பற்றியும் கற்றுத்தருகிறான்.

**Dr. ஜான் அன்கெர்பெர்க்:** அவன் ரொம்ப அழகான குழந்தை!

**ராபி கேலட்டி:** ஆ, அவன் ரொம்ப சுட்டி, ஆனா ரொம்ப வியப்பானவன். எங்களுக்கு பொறுமையை கற்றுத்தருகிறான். ஒருத்தரிடம் குழந்தை வளர்ப்பை பற்றி பேசிகொண்டிருந்தேன். அவங்க சொன்னாங்க, "ராபி, முரட்டாம் என்பதன் அடிப்படையில் ஒருவரை ஒழுக்கத்திற்குள் நடத்துவதற்கும் அறியாமையை பற்றி போதிப்பதற்கும் வித்தியாசம் இருக்கிறது." குழந்தை வளர்ப்பை யோசித்து பாருங்கள், ஒரு குழந்தை பிடிவாதம் பிடிக்கும்போது, குறும்பா இருந்தா, நீங்க குழந்தையிடம் போய் பேசும்போது, "உனக்கு என்ன செய்யணுன்னு தெரியலன்னு சொல்வீங்க." இப்ப, அதற்கு அந்த குழந்தையின் பதில், "ஆமா, எனக்கு என்ன செய்யணுன்னு தெரியும், டாட். என்று சொன்னால், நீங்க, இல்ல என்ன செய்யணுன்னு உனக்கு தெரியல, ஏன்னா என்ன செய்யணுன்னு தெரிந்திருந்தா, நீ அதை செய்திருப்ப. நீ அப்படி செய்யாததால உனக்கு, என்ன செய்யணுன்னு தெரியாதது நல்லா தெரியுது என்பீர்கள்." இல்ல பா, எனக்கு தெரியும்." இப்படி சொல்லுன்போது ஒரு பெற்றோரா உங்களுக்கு பொறுப்பு இருக்கு: இது முரட்டாட்டமா இருப்பதால ஒழுக்கத்தை சொல்லிதருவேனா, இல்ல அறியாமல் இருப்பதை கற்றுகொடுப்பேனா?

சபை மக்களுக்கு கேட்கப்படும் கேள்வி இதுதான்" முரட்டாட்டத்தினால் தேவனை பின்பற்றாமல் இருக்கிறீர்களா அல்லது அறியாமையினால் பின்பற்றாமல் இருக்கிறீர்களா? அது அறியாமையாக இருந்தால், அது வேற, ஆனா முரட்டாட்டமாக இருந்தால், இது முற்றிலும் மாறுபட்ட விஷயம்.

**Dr. ஜான் அன்கெர்பெர்க்:** முரட்டாட்டம் பண்ணுகிறவர்களை தேவன் ஒழுக்கத்திற்குள் நடத்திடுவார்.

**ராபி கேலட்டி:** ஆமா. தேவன் தாம் நேசிக்கிறவர்களை சிட்சிக்கிறார் என்று வேதம் சொல்கிறது.

**Dr. ஜான் அன்கெர்பெர்க்:** ஓகே, ராபி, இன்றைக்கு ஜனங்கள் எடுக்க வேண்டிய தீர்மானம் அவர்கள் தேவனுடைய வார்த்தையை நிராகரித்து முரட்டாட்டமாக இருக்கபோகிறார்களா அல்லது அதற்கு கீழ்படிந்து பின்பற்ற போகிறார்களா. நீங்க சிறந்த உதாரணத்தை வைத்திருக்கிறீர்கள் 2 நபர் எடுத்த தீர்மானத்தினால் அவர்களுடைய வாழ்க்கை மாற்றமடைந்ததோடு அவர்களை சுற்றி இருந்தவர்களுக்கும் தாக்கத்தை உண்டாக்கியது. அவர்கள் யார்?

**ராபி கேலட்டி:** ஆமா. இரண்டு பேரை பற்றி சொல்ல விரும்புகிறேன், சிக்மண்ட் பிரெட் மற்றும் C. S. லூவிஸ். சிக்மண்ட் பிரெட் யூத தகப்பனாருடைய பக்தியுள்ள குடும்பத்தில் வளர்க்கப்பட்டார். அவர் 1856ல் பிறந்தார், அவருடைய குழந்தை பருவத்தில் கத்தோலிக்க அம்மையார் பராமரித்தார்கள், அவரை சபைக்கு அழைத்து செல்வார்கள். அவர் தேவனை நேசிக்கிரவராக இருந்தார், அது அவருடைய, சிறுவயது காலம். ஆனா சிக்மண்ட் பிரெட் வாழ்வில் ஒரு சம்பவம் நடந்தது. அவங்க அப்பா பணம் திவாலான நிலை உண்டானது. அதனால, சபைக்கு போய் தேவனை பற்றி அறிந்துகொள்வதற்கு பதிலாக, குடும்பத்திற்காக பணம் சம்பாதிக்கும்படி உலகத்தில் தள்ளப்பட்டார். அவர், கல்லூரி படிப்பை முடித்தார் 1870களில் அவர் டார்வினிசத்தை பற்றி கேள்விப்பட்டு டார்வினுடைய எழுத்துகளை வாசிக்க துவங்கினார், அதினால் தேவனை பின்பற்றும் நிலையை விட்டு முழுவதும் நாத்திகனாக மாறினார். அப்போதுதான் தன்னை பற்றி தெரிந்துகொண்டார். அவருடைய வாக்கியங்களில் ஒன்றை வைத்து அதை எழுதும்போது எப்படி இருந்தார் என்பதை நான் அறிந்துகொண்டேன். அவர் சொல்கிறார், “மதங்கள் என்பது முற்றிலும் அலட்சியமாக காணப்படலாம். அவை அனைத்தும் உருவெடுத்த நாளை முத்திரையாக பெற்று வளம் வருகிறது, மனுக்குலத்தின் அறியாமையின் குழந்தை

பருவ நாட்கள் அது.”

அதாவது, பிரெட் என்ன செய்தாருன்னா, மனிதர்கள் தங்கள் எதிர்காலத்தை நிர்ணயிக்கமுடியும் என்று நினைத்தார், அவங்களுடைய சொந்த அமைப்பு, இதை செய்வதற்கு மதங்களை சார்ந்திட தேவையில்லை என்றார். சரி, அவர் அப்படி செய்திருக்கலாம். 1930களில், தன் முடிவை அவரே நிர்ணயித்தார். மோர்பைன் ஊசியை தனக்கு தானே போட்டுகொண்டு அவர் தற்கொலை செய்து மரித்துவிட்டார்.

இன்னொரு பக்கம், C. S. லூவிஸ் என்ற நபர் சிறுவயதிலிருந்தே தேவன் மீது அன்பு கொண்டிருந்தார். அவருடைய பத்தாவது வயதில், தனது தாயாரின் சுகத்திற்காக ஜெபித்தார். அவங்க அம்மா ஹாஸ்பிடல்ல வியாதியாக, இருத்தாங்க. ஆனா தேவன் அவருடைய ஜெபத்திற்கு பதில் கொடாத போது தேவனுக்கு தனது முதுகை காட்டினார். எதிர்பாராத நிகழ்வு பாருங்க நாற்பத்திரண்டு ஆண்டுகளுக்கு பிறகு, பிரெட் C.S. லூவிஸ் வாழ்வில் தாக்கத்தை ஏற்ப்படுத்தினார். இவர் அவருடைய புத்தகங்களை வாசிக்க துவங்கினார் சித்தாந்த பள்ளிகளுக்கும் சென்று படித்தார். ஆனா C.S. லூவிஸ் வாழ்வில் ஒரு விஷயம் நடந்தது. ஒருவர் அவருக்கு கிரேக்க மொழியின் புதிய ஏற்பாடு வேதாகமத்தை கொடுத்தார். அவர் அதை கிரேக்க மொழியில் வாசிக்க துவங்கினார், பிறகு அவர் J.R. R. டோல்கீன் மற்றும் பார்பீல்ட் போன்ற நபர்களால் கவர்ந்திலுக்கப்பட்டார். மறுபடியும் தேவன் பக்கமாக திரும்ப ஆரம்பித்தார்.

அவர் தேவன் மீது விசுவாசம் உடையவராக மாறினார். தேவன் அவருடைய வாழ்வை மாற்றினார், அதற்கு பிறகு லூவிஸ்  தேசமெங்கும் கேட்கும்படி பதினைந்து நிமிட வானொலி நிகழ்ச்சியை கொடுக்க துவங்கினார். ஜனங்கள் அவருடைய நிகழ்ச்சியை அதிகமாக நேசித்தனர். அவர் என்ன செய்வாருன்னு பார்த்தா, மதம் மற்றும் விசுவாசம் இதை பற்றிய பிரச்சனைகளை எடுத்து ஜனங்களுக்கு அதை விளக்கி சொல்லுவார். சரி, இது ரொம்ப சுவாரஸ்யமாகவும் பிரபலாமாகும் இருந்தது, இன்றைக்கு நமது கரத்தில் இருக்கும் புத்தகங்களாக அவற்றை வடிவமைத்தார்கள், அதுதான், “மெர்ரி கிறிஸ்டியானிட்டி.” சரி, அநேகருக்கு லூவிசை தெரிந்திருக்கும் ஏன்னா பல புத்தகங்களை எழுதியிருக்கிறார். அவருடைய எழுத்துக்கள் “நான்கு சிநேகம்.” அப்பறம்

“அனுசரிக்கப்பட்ட வியாகுலம்” இதுல பிரபலமான ஒன்று “தி கிரானிகல்ஸ் ஆப் நார்னியா.”

இந்த இவருடைய வாழ்க்கையில் சுவாரஸ்யமானது என்னனா, ஜான். ஒரு நபர் தேவன் அவருடைய வார்த்தை என்று துவங்கி இறுதியில் பின்மாற்றமடைந்தார். அடுத்த நபர் சாதாரண நம்பிக்கையோடு துவங்கி, தேவனை விட்டு விலகி, தன்னுடைய வாழ்வின் இறுதியில் கிறிஸ்துவிடம் திரும்பினார். இரண்டு நபர்கள், இரண்டு பாதை, இரண்டு முடிவுகள், இரண்டு விளைவுகள். கேள்வி என்னன்னா, நாம் எந்த முடிவை நோக்கி சென்றுகொண்டிருக்கிறோம்?

அதாவது, இதை பார்த்துகொண்டிருக்கிறவர்களை ஊக்குவிக்குமாறு ஒன்று சொல்ல விரும்புகிறேன், ஒருவேளை தேவனை பின்பற்றியவர்களாயிருந்து இப்போது தேவனை விட்டு விலகியிருக்கலாம். ஒருவேளை தேவனோடு நல்ல உறவு இருந்து இப்போது மரத்து போயிருக்கலாம் அல்லது கிறிஸ்துவின் கட்டளைகளுக்கு மந்தமான நிலை காணப்படலாம். அவர்களை உற்சாகப்படுத்தும்படியாக சொல்லுகிறேன், இன்றைக்கே நீங்கள் துவங்கிடலாம். “எப்படி அது சாத்தியமாகும், ராபி என்கிறீர்களா? உங்களுக்கு தெரிந்ததை வைத்து ஆரம்பியுங்கள். தேவனுடைய கட்டளைகளில் இருந்து துவங்குங்கள். அதாவது, அநேகர் சொல்வது இதுதான், “நான் என்ன செய்யணுன்னு தேவன் சொல்றது எனக்கு தெரிந்தா நல்லா இருக்கும். சரி, உங்களுக்கு அது தெரியும். அவருடைய வார்த்தையில் அதை நமக்கு அவர் ஏற்கனவே கொடுத்திருக்கிறார். நமக்கு தெரிந்ததை வைத்து நாம என்ன செய்யலான்னு தெரிந்து நடக்க இன்றைக்கே துவங்கிடலாம் என்பதை உங்களுக்கு தெரியப்படுத்தி உங்களை உற்சாகப்படுத்துகிறேன்.

**Dr. ஜான் அன்கெர்பெர்க்:** ஆல்ரைட், அடுத்த வாரம், இதை தொடர்ந்து பார்க்க இருக்கிறோம். பிரதான கட்டளையில் இருக்கும் வாக்குத்தத்தத்தையும் நாம் பார்க்க இருக்கிறோம், இயேசு சொல்லுகிறார் அவருக்கு நாம் கீழ்படியும்போது, பிரதான கட்டளயின் படி வாழ துவங்கும்போது, ஜனங்களுக்கு போதித்து அவர்களை சீஷர்களாக ஏற்படுத்தும்போது, அவர் நமக்கு ஒரு வாக்கு தத்தத்தை கொடுக்கிறார்: “இதோ, நான்

உலகத்தின் முடிவுபரியந்தம் நான் உங்களுடனே கூட இருக்கிறேன்.” ஆல்ரைட்? இந்த ஒரு வாக்குத்தத்தத்தில் இருக்கிற மற்ற ஆசீர்வாதங்களை குறித்து பார்க்க இருக்கிறோம், ஆல்ரைட்? இதை பற்றி அடுத்த வாரம் பார்த்திடலாம். இணைந்திருங்கள்.

எங்களுடைய தொலைக்காட்சி நிகழ்சிகளை காண

இலவச ஜான் அன்கெர்பெர்க் நிகழ்ச்சி ஆப்பை பதிவிறக்கம் செய்திடுங்கள்.

இயேசு கிறிஸ்துவை ஏற்றுகொள்வதற்கான ஜெபம் @JAshow.org

@2015 A.T.R.I.